**கசகசா**

1. **வேர் கூன்வண்டு, ஸ்டெர்னோகாரஸ் புல்ஜினோசஸ்**

   **சேதத்தின் அறிகுறி:**

   - புழுக்கள் வேர்களை உண்ணும்

   **கட்டுப்படுத்தும் முறை:**

   - நடுவதற்கு முன்னால் லின்டேன் 1.3 டி 10 கிலோ / ஏக்கர்க்கு எடுத்து மண்ணில் போடவும்

2. **வெட்டுப்புழு, அக்ரோடிஸ் வகை:**

   **சேதத்தின் அறிகுறி:**

   - புழுக்கள் இளந்தாவரங்களை தரைமட்டத்திலிருந்து வெட்டிவிடும்
   - புழுக்கள் பகலில் தரையின் வெடிப்புகளில் ஒளிந்து இருக்கும் மற்றும் இரவில் சுறுசுறுப்பாக காணப்படும்

   **பூச்சியின் விபரம்:**

- புழு கரும் பழுப்பு நிறத்திலும், சிவப்பு வண்ண தலையுடனும் காணப்படும்
- அந்துப்பூச்சி பழுப்பு நிறத்திலும், இறக்கைகளில் கரும் புள்ளிகள் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழுக்களை கையால் பொறுக்கி அழிக்கவும்
- வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிதம் தெளிக்கவும்
- நெல் தவுடு, வெல்லம் மற்றும் கார்பாரில் கலந்து நச்சுப்பொறியாக பயன்படுத்தலாம்

3. **அசுவினி, மைசஸ் பெர்சிகே**

**சேதத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும், பூச்சிகளும் இலைகளில் உள்ள சாற்றை உறிஞ்சும்

**பூச்சியின் விபரம்:**

- பூச்சிகள் மஞ்சள் கலந்த பச்சை நிறத்தில் காணப்படும், சில நேரங்களில் சிவப்பு நிறங்களில் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- வேப்பம் எண்ணெய் 0.5 சதவிதம் (அ) வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிதம்
- இயற்கை எதிரிகளான பொறிவண்டுகளை பாதுகாத்து பயன்படுத்தலாம்

**4. காய்ப்புழு, ஹெலிக்கோவெர்பா ஆர்மிஜெரா**

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் பூக்கொண்டையையும், விதைகளையும் உண்ணும்

பூச்சியின் விபரம்:

- புழு பச்சை நிறமாகவும் பழுப்பு நிறக் கோடுகள் உடம்பில் தோன்றும்

- அந்துப்பூச்சி பழுப்பு நிறமாகவும் ◌V◌ வடிவ குறியீட்டுகளும் பின்னிறக்கையில் கருப்பு கோடுபோல் ஓரத்தில் தோன்றும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழுவை கையால் பொறுக்கி அழிக்கவும்
- இனக்கவர்ச்சிப்பொறி எக்டர்க்கு 12 வைக்கவும்
- என்.பி.வி 250 எல்.இ / எக்டர் தெளிக்கவும்
- பாஸில்லஸ் துரின்ஜியன்ஸிஸ் உருவகம் 2கிராம் / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கலாம்
- முட்டை ஒட்டுண்ணி ட்ரைக்கோகிரம்மா கைலானிஸ் 5 சிசி / எக்டர் பயன்படுத்தவும்